பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
09 11 2024 **SATURDAY** 6 45 **AM**
வணக்கம். மாநில செய்திகள்
தலைப்புச் செய்திகள்

- சர்வதேச நிறுவனங்களுடன் போட்டியிடும் வகையில், இந்திய நிறுவனங்கள், குறைந்த செலவில் தரமான மருத்துவ சாதனங்களை தயாரித்து வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.
- உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்கவுள்ள நீதிபதி சஞ்சீவ் கண்ணா, நீதி வழங்குவதில் ஆழ்ந்த அர்ப்பணிப்பு கொண்டவர் என்றும் தலைமை நீதிபதி சந்திரசூட் கூறியுள்ளார்.
- மாணவர்கள் ஆரம்பக் கல்விக்குப் பின்னர், தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் என்பதற்காக அதிக அளவில் உயர்நிலைப் பள்ளிகளை மாநில அரசு திறந்து வருவதாக சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. பிச்சாண்டி தெரிவித்துள்ளார்.
- தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியாக திருமதி. அர்ச்சனா பட்நாயக் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 61 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

>>>><<<<

சர்வதேச நிறுவனங்களுடன் போட்டியிடும் வகையில், இந்திய நிறுவனங்கள், குறைந்த செலவில் தரமான மருத்துவ சாதனங்களை தயாரித்து வருவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று மருத்துவ சாதனங்கள் உற்பத்தி தொழில் துறையினருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், புதிய திட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இத்திட்டம் மருத்துவ சாதனங்கள் உற்பத்தியில் நாடு சுயசார்பு நிலையை அடைய உதவும் என்று கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியதால், தொழில்துறை வேகமாக வளர்ச்சியடைந்து வருவதாக அவர் தெரிவித்தார்.

தொழில்துறையினருக்கு மத்திய அரசு வழங்கும் பல்வேறு உதவிகளை அத்துறையினர் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. ஜெ.பி. நட்டா கேட்டுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய ரசாயனம் மற்றும் உரத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேல், மத்திய அரசின் உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை வழங்கும் திட்டம், மருத்துவ சாதனங்களை உற்பத்தி செய்யும் தொழில் துறையினருக்கு பெருமளவில் ஊக்கமளிக்கும் என்று கூறினார்.

மருத்துவ சாதனங்களை வடிவமைப்பதற்கும், பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் மத்திய அரசு நிதியுதவி வழங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்கவுள்ள நீதிபதி சஞ்சீவ் கண்ணா, கண்ணியமானவர் என்றும், நீதி வழங்குவதில் ஆழ்ந்த அர்ப்பணிப்பு கொண்டவர் என்றும் தலைமை நீதிபதி சந்திரசூட் கூறியுள்ளார்.

நாளையுடன் தலைமை நீதிபதி பொறுப்பிலிருந்து ஓய்வு பெறவுள்ள அவர், உச்சநீதிமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற பிரிவு உபச்சார விழாவில் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

நீதிமன்றத்தில் தாம் பணியாற்றிய போது, ஒவ்வொரு நாளும் சட்ட அறிவு மற்றும் தனிப்பட்ட நுண்ணறிவு இரண்டையும் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது என்றும் அவர் கூறினார்.

புதிதாக தலைமை நீதிபதியாக பொறுப்பேற்கவுள்ள சஞ்சீவ் கண்ணா, தொலைநோக்குப் பார்வையுடன் நீதிமன்றத்தை வழிநடத்துவார் என்றும் அவர் தெரிவித்தார்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியான சந்திர சூட், தனது பதவிக் காலத்தில் அயோத்தி நில விவகாரம் உட்பட பல முக்கியமான வழக்குகளில் தீர்ப்பளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

மாணவர்கள் ஆரம்பக் கல்விக்குப் பின்னர், தொடர்ந்து கல்வி கற்க வேண்டும் என்பதற்காக அதிக அளவில் உயர்நிலைப் பள்ளிகளை மாநில அரசு திறந்து வருவதாக சட்டப்பேரவை துணைத்தலைவர் திரு. பிச்சாண்டி தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், வேடநத்தம், ராஜந்தாங்கல், சொரக்குளத்தூர் ஆகிய இடங்களில் நபார்டு வங்கி திட்டத்தின் மூலம், 2 கோடியே 43 லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி புதிய வகுப்பறை கட்டிடங்களை நேற்று திறந்து வைத்து அவர் பேசினார்.

கல்வி ஒன்று தான் வாழ்க்கையில் நிலையானது என்பதால், மாணவர்கள் படிப்பை பாதியில் நிறுத்தி விடாமல் தொடர்ந்து படித்து, வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

கீழ்ப்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 11 உயர்நிலைப் பள்ளிகளை திறக்க மாநில அரசு அனுமதி அளித்துள்ளதாகவும் திரு. பிச்சாண்டி கூறினார்.

>>>><<<<

நாமக்கல் மாவட்டத்தில் சுமார் 90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அதிநவீன பால்பண்ணை அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருவதாக மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு. ராஜகண்ணப்பன் தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்தில் சிங்கலாந்தபுரம் பால் குளிரூட்டும் நிலையத்தில் நேற்று ஆய்வு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மாவட்டத்தில் 485 பால் கூட்டுறவு சங்கத்தின் 13 ஆயிரம் உறுப்பினர்களிடமிருந்து நாளொன்றுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் லிட்டர் கொள்முதல் செய்யப்படுவதாக கூறினார்.

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திலிருந்து 18 தொகுப்பு குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 16 நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாமக்கல் மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியம், மாதம் ஒன்றுக்கு 60 லட்சம் ரூபாய் லாபம் ஈட்டி வருவதாகவும், பால் உற்பத்தியாளர்களுக்கு தேவையான கடனுதவிகள் மற்றும் பால் கொள்முதலுக்கான தொகை உடனுக்குடன் வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

>>>><<<<

தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரியாக திருமதி. அர்ச்சனா பட்நாயக் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த இவர், மாநில அரசின் சிறு குறு தொழில்துறையின் செயலராக பணியாற்றி வருகிறார்.

தலைமை தேர்தல் அதிகாரியாக திருமதி. அர்ச்சனா பட்நாயக் நியமிக்கப்பட்டதன் மூலம், தமிழகத்தின் முதல் பெண் தலைமை தேர்தல் அதிகாரி என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு முதல் இப்பொறுப்பில் இருந்து வந்த திரு. சத்யபிரத சாஹூ, தமிழக அரசின் கால்நடை பராமரிப்புத்துறை செயலராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் நடப்பாண்டு ஒரு லட்சத்து 38 ஆயிரம் கோடி ரூபாய் வருமான வரி வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் நேற்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய வருமான வரித்துறையின் மதுரை மண்டல முதன்மை ஆணையர் திரு. வசந்தன் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - வசந்தன் 48 செகண்ட்ஸ்)

>>>><<<<

இளையோர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ், காஷ்மீரைச் சேர்ந்த 132 இளைஞர்கள் சென்னை வந்துள்ளனர்.

இன்று முதல் இம்மாதம் 15ஆம் தேதிவரை சென்னை அடையாறில் உள்ள இளையோர் விடுதியில் தங்கியிருந்து கலை மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளனர்.

காஷ்மீரின் அனந்தநாக், குப்வாரா, பாரமுல்லா, பட்காம், ஸ்ரீநகர், புல்வாமா ஆகிய ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

இக்குழுவினர், தமிழகத்தில் கலாச்சாரம் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களுக்கும், கல்வி நிலையங்களுக்கும் சென்று இளைஞர்களுடன் கலந்துரையாடவுள்ளனர்.

எல்லை தாண்டிய தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட காஷ்மீர் இளைஞர்களிடம், தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, அமைதியை ஏற்படுத்தும் வகையில், இத்தகைய நிகழ்ச்சிக்கு மத்திய உள்துறை அமைச்சகமும் இளையோர் விவகாரங்கள் துறையும் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

>>>><<<<

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை, விஜயகரிசல்குளத்தில் நடைபெற்று வரும் மூன்றாவது கட்ட அகழாய்வுப் பணியின் போது, தங்கத்தாலான மணி கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர் நாகரிகம் செழிப்பாக இருப்பதை இது காட்டுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் 38 செகண்ட்ஸ்)

>>>><<<<

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில், தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக்கூடும் என்றும் இது, அடுத்தடுத்த நாட்களில் மேற்கு திசையில் தமிழகம் - இலங்கை கடற்பகுதியை நோக்கி நகரக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

இருவரிச் செய்திகள்

காஸாவில் உயிரிழந்தோரில் 70 சதவீதத்திற்கும் மேற்பட்டோர், பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று ஐ.நா மனித உரிமை அமைப்பு தெரிவித்துள்ளது.

>>>><<<<

ஆம்ஸ்டர்டாமில், இஸ்ரேல் கால்பந்து ரசிகர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு அமெரிக்க அதிபர் திரு. ஜோ பைடன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

கடலோர காவல்படையின் கிழக்கு மண்டலம் சார்பில் கடத்தலுக்கு எதிரான ஒத்திகை நிகழ்ச்சி நேற்று விசாகப்பட்டிணம் விமான நிலையத்தில் நடைபெற்றது.

>>>><<<<

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அருகே திருமேனி ஏரிப் பகுதியில் நரிக்குறவர் மக்களுக்காக கட்டப்பட்டு வரும் வீடுகளை மாநில அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

>>>><<<<

தமிழகம் முழுவதும் பொதுவிநியோக திட்ட குறைதீர் முகாம் இன்று நடைபெறவுள்ளது.

>>>><<<<

மாமன்னர் ராஜராஜசோழரின் ஆயிரத்து 39-வது சதய விழா, தஞ்சாவூர் பெரியகோவில் வளாகத்தில் இன்று தொடங்கவுள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் இன்று அரசு அலுவலகங்கள் மற்றும் பள்ளி கல்லூரிகள் வழக்கம் போல் செயல்படும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>><<<<

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இந்திய அரிய மணல் ஆலை நிறுவனத்தின் சார்பில் கண்காணிப்பு வாரம் நேற்று கொண்டாடப்பட்டது.

>>>><<<<

மத்திய அரசின் நேரு இளைஞர் மையம் மற்றும் மைபாரத் அமைப்பு சார்பில் போதைப் பொருள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் தருமபுரியில் நேற்று நடைபெற்றது.

>>>><<<<

விளையாட்டுச் செய்தி

தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 61 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

டர்பனில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய இநதியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 202 ரன் எடுத்தது.

203 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய தென்னாப்பிரிக்க அணி, 17 புள்ளி ஐந்து ஓவரில் 141 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>><<<<